# வீரஅஞ்சலி

தேசியவீரர்
**கந்தையா பேரின்பநாதன்**
விடுதலைப்புலிகளின் அனைத்துலக நிதிப்பொறுப்பாளர்
பிறப்பு:10-10-1964

தேசியவீரர்
**கந்தையா கஜேந்திரன்**
விடுதலைப்புலிகளின் பிரெஞ்சுக்கிளையின் நீண்டகால உறுப்பினர்
ஈழமுரசுப் பிரதம ஆசிரியர்
பிறப்பு:17-04-1966

**வீரமரணம்: 26-10-1996**

# உலகே இதனைப் பாராயோ !

நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்தநல் நடையும்
பார்த்தோம் உந்தன் படைப்புகளில்
வேர்கொண்ட சதியின் விளைவினால் உடைந்த
கூர்முனைப் பேனா பாடைதனில் !

கஜ னெனும் கண்ணிய
நிஜம் நீ றானது !

யார்வந்த போதிலும் எதுவென்ற போதிலும்
போர்வென்று ஈழம் படைப்பதனில்
பார்நாடு பலதிலும் மார்வீரம் கொண்டிட
காரென்று நின்ற காற்றோய்ந்தது !

நாத னே நற்பணி
நாத மே நின்றது !

9661-01-92

வாளேந்திச் சிங்கள கொடிதாங்கிச் சென்றவர்
தான்செய்த பயங்கரச் சதியல்லவா
ஏனிந்தக் கொடியகை பார்மண்ணிற் பதியுது
பார்! இதைப் பார்!எனப் பறைசாற்றுவோம் !

விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகம் –யேர்மனிக்கிளை

# மாவீரர்களுக்கு

# எமது இதய அஞ்சலி



கந்தையா பேரின்பநாதன்
(நாதன் - அரியாலை)
(தமிழீழ விடுதலைப் புலிகளின்
அனைத்துலக நிதிப் பொறுப்பாளர்)

**மலர்வு: 10.11.1964**





கந்தையா கஜேந்திரன்
(கஜன் - கோண்டாவில்)
(தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுக் கிளையின்
நீண்டகால உறுப்பினர் / ஈழமுரசு பத்திரிகை ஆசிரியர்)

**மலர்வு: 17.04.1966**

## அநியாய அழிப்பில்: 26.10.1996

தலைவன் போற்றிய தேசிய வீரர்களே!
உங்கள் பிரிவு கனமானது!
எங்களோடு நீங்கள் விட்டுச் சென்ற நினைவுகள் கனமானவை!
அந்த நினைவுகளோடு... நீங்கள் விட்டுச் சென்ற பணிகளைச் சுமப்பதே
எங்கள் கடமைகளாகட்டும்!!
வடக்கிலும் கிழக்கிலும்... எங்கள் மண்ணிலே... சொந்த நாட்டிலே எங்கள்
சொந்தங்கள் அன்னியப் பிடியில் சிக்கிய அவலங்கள். ஒட்டிய வயிற்றுடன்
ஒதுங்க இடமின்றி காடுகளுக்குள்ளும் இடம் பெயர்ந்து ஒடுங்கிய கொடுமை.
உடுத்ததுணியுடன் மாற்றுடையின்றி.. காடுகளுக்குள் வனவாசிகளாய் எம் மக்கள்..!
கஜனண்ணா... உங்கள் இதயத்தைப் போல் உங்கள் பேனா அழுதது!
உங்களின் பேனா அழுதுரைத்த வரிகள் எத்தனை கல்மனங்களை
உழுதிருக்கும் தெரியுமா..?
எங்கள் புனர்வாழ்வுக் கழகப்பணிக்கு இலகுவாகப் பாதையமைத்ததில்
உங்கள் எழுத்துக்கும் உரிமம் இருக்கின்றது.
நாட்டில் மக்கள் படும் துன்பங்கண்டு வீட்டுநினைப்பைவிட்டு...
நாடுகாக்க... நாடுவிட்டு நாடு ஓடித் தேடித்தேடி தேடிப்பணத்தை தமிழரின்
பாதுகாப்பாக்கினீர்களே... நாதனண்ணா!
சிறீலங்கா அரசின் கூலி ஒருவனின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு
உங்களைப் பறிகொடுத்துவிட்டோம்தான். ஆனால்... உங்கள்
நினைவுகளைப் பறிகொடுக்கவில்லை.
எங்கள் உணர்வை... எங்கள் கடமையைப் பறிகொடுக்கவில்லை.

**உறுதி எடுக்கிறோம்!**
**உங்கள் கல்லறைகள் மீது எங்கள் கைகளை வைத்து உறுதி எடுக்கின்றோம்!**
**எமது பணி தொடரும்.. முன்னரிலும் வேகமாகவும் அழுத்தமாகவும்!**
**எமது இலட்சியம் நிறைவேறும்வரை உறுதியாக!!!**

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரான்ஸ் கிளை**

# வீரவணக்கம்





தேசிய வீரர்
விடுதலைப் புலிகளின்
அனைத்துலக நிதிப் பொறுப்பாளர்
**கந்தையா பேரின்பநாதன்**
(யாழ்/கனகரத்தினம் மத்திய
மகாவித்தியாலயம்)
அரியாலை

தேசிய வீரர்
விடுதலைப் புலிகள் பிரெஞ்சுக்
கிளை நீண்டகால உறுப்பினர்
ஈழமுரசு ஆசிரியர்
**கந்தையா கஜேந்திரன்**
(யாழ்/இந்துக் கல்லூரி)
கோண்டாவில்

| பிறப்பு | வீரச்சாவு | பிறப்பு |
|---|---|---|
| 10.11.1964 | 26.10.1996 | 17.04.1966 |

விடுதலை தேடிய பறவைகள்
உலகெலாம் சுற்றி..........
ஒளிக்கதிர் தேடிய விடியலின் குழந்தைகள்.
குளிர்மூட்டத்திலும்
நாட்டின் நினைப்பு தீ மூட்ட
நர்த்தனமாடிய நந்தவனங்கள்.
எங்கு சென்றீர்...............?
வாழ்வைத்தொலைத்த மனிதரிடத்தே
வாழ்வைத்தேடிய மானிடர்கள்.

நாதன்!!
அற்புதமான வரலாற்றுப் பணியைச்
சுமந்த உன்னை
உயிரற்ற உடலாகிக் காவும் வேதனை.
நெஞ்சை அடைக்கின்ற சோகத்தினூடே
விடுதலை அவாவும் மூச்சு.

கஜன்!!
சிவகுமாரன் தொடக்கிவைத்த
விடுதலைத் தீயில் நீயும் நெருப்பாக.
யாழ் இந்துக்கல்லூரியின் தேசியப்பற்றை
தேசம் தாண்டிவந்தும் நிருபித்தவன்.
எழுத்தும், பேச்சும் இனிமைதவழும் உன்சிரிப்பும்
இனிக் கிட்டாதா.............?
எங்கே போனது கிட்டுவதற்கு........?
அது என்றும் எம்முடனே!!!

- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் -

தமிழ் அச்சகம் 01 42 09 60 64